**பத்திரிகை வெளியீடு**

கொழும்பு, 13 ஜுலை 2017

Good Food, Good Life

## Mom, Me and My *Milo* போட்டிக்கு பாரிய எண்ணிக்கையில் நுழைவுகள் கிடைக்கப்பெற்றுள்ளன

*அன்னையரையும், அவர்களது பிள்ளைகளையும் ஒன்றிணைக்கும் வகையில் இடம்பெறும் இப்போட்டி பாரிய அளவில் வரவேற்புப் பெற்றுள்ளமை அன்னையர் மைலோ மீது வைத்துள்ள மிகுந்த நம்பிக்கையின் வெளிப்பாடாக உள்ளது.*

கடந்த இரு ஆண்டுகளாக முன்னெடுக்கப்பட்டு வந்த Mom, Me and My Milo போட்டியின் மகத்தான வெற்றியின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டு, தனது இதயமாக வீற்றிருப்பதுடன், தன்னுடன் மிகவும் முக்கியமான தொடர்புபட்ட தரப்பினரான அன்னையர் மற்றும் பிள்ளைகளிடையே பாசப் பிணைப்பை வலுப்படுத்தி, அவர்கள் ஒன்றிணைந்து உடற்பயிற்சி மிக்க வாழ்க்கை முறையை முன்னெடுப்பதற்கு அவர்களை வழிநடாத்துவதற்கு மைலோ மீண்டும் ஒரு முறை தயாராகியுள்ளது.

செல்ஃபி புகைப்படம் எடுப்பது தற்போது மிகவும் பிரபலமாகியுள்ள நிலையில், அதனை அடியொற்றி, இந்த அதிர்ஷ்டக் குலுக்கல் போட்டியில் நுழைந்து கொள்வதற்காக அன்னையர் தமது பிள்ளைகளுடன் ஒன்றிணைந்து மைலோ பக்கட் ஒன்றுடன் விநோதமான வகையில் செல்ஃபி புகைப்படங்களை எடுத்து அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டிருந்தனர். அவர்களில் 1,000 அதிர்ஷ்டசாலி வெற்றியாளர்கள் மைலோ வர்த்தகநாம பைசிக்கிள்களை வெல்லவுள்ளனர்.

இந்த ஆண்டு போட்டிக்கு நுகர்வோரிடமிருந்து மிகுந்த வரவேற்புக் கிடைத்துள்ளதுடன், கடந்த இரு ஆண்டுகளில் பெறப்பட்ட நுழைவுகளின் எண்ணிக்கையைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாக கிடைக்கப்பெற்றுள்ளது. வர்த்தகநாமத்தின் மீது நுகர்வோர் கொண்டுள்ள வலுவான நம்பிக்கை மற்றும் அபிமானத்தை இது புலப்படுத்துவதாக நெஸ்லே லங்கா நிறுவனத்தின் பான வகை உற்பத்திப்பிரிவிற்கான பிரதித் தலைமை அதிகாரியான நோர்மன் கன்னங்கர அவர்கள் குறிப்பிட்டார்.

"எமது செயற்பாடுகள் அனைத்திலும் எமது நுகர்வோரே இதயநாதமாக உள்ளதுடன், அன்னையர் மற்றும் பிள்ளைகளுக்கு தமது அன்புப் பிணைப்பை புது விதமாக வெளிப்படுத்தும் வாய்ப்பினை வழங்கி, அவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து உடற்பயிற்சி மிக்க வாழ்க்கை முறையை அனுபவிப்பதற்கு இடமளிப்பதை முன்னிட்டு நாம் மிகவும் பெருமை கொள்கின்றோம். இந்த ஆண்டு போட்டியில் பெரும் எண்ணிக்கையில் நுழைவுகள் கிடைக்கப்பெற்றுள்ளமை, இந்த வர்த்தகநாமத்தின் மீது நுகர்வோர் கொண்டுள்ள விசுவாசத்தையும், அவர்களுடைய இதயசுத்தியுடனான போற்றுதலையும் காண்பிக்கின்றது. எமது நுகர்வோரை எந்தளவிற்கு நாம் மதிக்கின்றோம் என்பதை இப்போட்டியின் அடுத்த கட்டத்தில் காண்பிப்பதற்கு நாம் மிகுந்த ஆவலுடன் உள்ளோம்."

அதிர்ஷ்டக் குலுக்கல் மூலமாகத் தெரிவு செய்யப்படவுள்ள 1,000 வெற்றியாளர்களின் பெயர் விபரங்கள் எதிர்வரும் வாரங்களில் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பாடசாலை மட்டத்தில் விளையாட்டு நிகழ்வுகளுக்கு வலுவாக ஆதரவளித்து, சிறுவர்கள் உடற்பயிற்சி நிறைந்த வாழ்வை முன்னெடுப்பதனை ஊக்குவிக்கும் ஒரு வர்த்தகநாமம் என்ற வகையில், உடற்பயிற்சிகளை விநோதமான வழியிலும் மேற்கொள்ளலாம் என்பதை சிறுவர்களுக்கு காண்பிக்க மைலோ எண்ணியுள்ளதுடன், வெற்றியாளர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பங்களுக்காக ஆகஸ்ட் மாதத்தில் மாபெரும் பைசிக்கிள் பவனி ஒன்றையும் ஏற்பாடு செய்யவுள்ளது.

கண்ணைக்கவரும் வகையிலும், மிகவும் தனித்துவமான அனுபவத்தை வழங்கும் விதமாகவும், இந்நிகழ்வு வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், பிள்ளைகள் தமது அன்னையருடன் கொண்டுள்ள அன்புப் பிணைப்பின் வெற்றியை அவர்கள் கொண்டாட உதவுவது மட்டுமன்றி, விளையாட்டுக்கள் மற்றும் ஏனைய செயற்பாடுகள் மூலமாக அவர்கள் ஆரோக்கியமான, உடற்பயிற்சி நிறைந்த வாழ்க்கை முறையை முன்னெடுக்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும் அவர்கள் மத்தியில் வளர்க்க உதவும். காலையுணவின் முக்கியத்துவம் தொடர்பில் பிள்ளைகள் மற்றும் அவர்களுடைய பெற்றோர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி, தினந்தோறும் அவர்கள் ஆரோக்கியமான காலையுணவை உள்ளெடுக்கும் உறுதிமொழியை அவர்கள் மேற்கொள்வதற்கு இந்நிகழ்வு அவர்களை ஊக்குவிக்கும்.

உள்நாட்டில், கிட்டத்தட்ட 20,000 வரையான பாற்பண்ணையாளர்களிடமிருந்து சேகரிக்கப்படுகின்ற புத்தம்புதிய, உயர் தரம் கொண்ட பால் மற்றும் மோல்ற்று பார்லியை உபயோகித்து தயாரிக்கப்படுகின்ற மைலோ, இரும்புச்சத்து, B விட்டமின்கள் மற்றும் கல்சியம் செழுமை நிரம்பியது. உலகெங்கிலும் பிரபலமான நெஸ்லே நிறுவனத்தின் அதியுயர் தர நடைமுறைகளைப் பேணியவாறு, குருணாகலில் உள்ள நெஸ்லே நிறுவனத்தின் அதி நவீன தொழிற்சாலையில் இது உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது.